TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102187

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 07/2023 Date: நாள் 08.10.2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.10.2023 Date to : நாள் வரை மற்றும் 06.10.2023

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை மற்றும் 10.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.10.2023 Time : நேரம் 17.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.10.2023 Time : நேரம் 19.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிராம நிர்வாக அலுவலகம், காளையார் கரிசல்குளம் சுமார் 35 கி.மீ கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.அ.பாலகிருஷ்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.அழகர்சாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி 1/58, கிழக்கு தெரு, காளையார் கரிசல்குளம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.பாலமுருகன், - கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், காளையார் கரிசல்குளம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர்) இன்று 08.10.2023ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, காளையார் கரிசல்குளம், கதவு எண்.1/58, கிழக்குத் தெருவை சேர்ந்த திரு.அழகர்சாமி என்பவரின் மகன் திரு.அ.பாலகிருஷ்ணன் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரிமீது எதிர்மறையான குறிப்புகளும், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 08.10.2023ஆம் தேதி இரவு 19.00 மணிக்கு காலம் 7-ல் கண்ட எதிரி திரு.பாலமுருகன், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், காளையார் கரிசல்குளம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2023 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம்-2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு விபரம் பின்வருமாறு.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

அ.பாலகிருஷ்ணன். 8.10.23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 9.10.2023 at 09.15 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN,
Rank: நிலை INSP. OF POLICE.

விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.07/2023 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

அனுப்புனர் திரு.அ.பாலகிருஷ்ணன், த/பெ.அழகர்சாமி, கதவு எண்.1/58, கிழக்கு தெரு, காளையார் கரிசல்குளம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, காளையார் கரிசல்குளம் கிராமத்தில் பூர்வீகமாக எனது குடும்பத்துடன் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அதேகிராமத்தில் நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில், எனது பெரியம்மா மகளான உடன்பிறவா அக்கா திருமதி.ஜானகி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார். அவரது கணவர் திரு.ராஜகுரு ஏற்கனவே காலமாகிவிட்டதால், அந்த குடும்பத்திற்கு நானே உதவியாக இருந்து வருகிறேன். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, காளையார் கரிசல்குளம் கிராமத்தில் அக்கா திருமதி.ஜானகிக்கு சொந்தமாக நிலம் (பட்டா எண்.729-ன்படி சர்வே எண்.19-12B19-இல் 3 செண்ட்) உள்ளது. அந்த நிலத்திற்கு நான்குமால் எல்லையில் ஊண்டியிருந்த கல்லை, மேற்படி நிலத்திற்கு அருகில் நிலம் வைத்துள்ள எங்கள் ஊரைச்சேர்ந்த திரு.வேலுச்சாமி மற்றும் அவரது மகன் சரவணக்குமார் ஆகியோர் பிடிங்கி எரிந்துவிட்டார்கள். ஆகையால் நான் எனது அக்காவுடன் எம்.ரெட்டியாபட்டி காவல் நிலையத்திற்கு சென்று 14.05.2023 அன்று அவரது பெயரில் புகார் மனு ஒன்று கொடுத்தேன். மேற்படி காவல் நிலையத்தில் அந்த புகார் மனுவிற்கு மனு இரசீது ஒன்று கொடுத்தார்கள். இது தொடர்பாக விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. ஆகையால் அன்றே (14.05.2023) நான் இது சம்பந்தமாக காளையார் கரிசல்குளம் V.A.O அலுவலகம் சென்று அங்கிருந்த V.A.O திரு.பாலமுருகனை சந்தித்து, என் அக்கா நிலத்தில் ஊண்டியிருந்த கல்லை புடிங்கி போட்ட விசயத்தையும், இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விசயத்தையும் சொன்னேன். அப்ப அவரு காவல் நிலையத்தில் ஒருபக்கம் விசாரிக்கட்டும் நீங்க வேணும்னா உங்க நிலத்த அளந்து கொடுக்க இ-சேவை மையத்துல பணம் கட்டிட்டு வந்து சொல்லுங்க, நான் சர்வேயருடன் வந்து நான்குமால் பார்த்து அளந்து கொடுத்துடுரேன், அப்புறம் நீங்க மீண்டும் கல்லை ஊண்டிக்கோங்கனு சொன்னார். ஆகையால் நான் அருப்புக்கோட்டை தாலுகா அலுவலகத்திற்கு வெளியே உள்ள இ-சேவை மையத்திற்கு 16.05.2023ஆம் தேதி சென்று, வி.ஏ.ஓ சொன்னது மாதிரி அக்கா திருமதி.ஜானகி பெயரில் ரூ.800/- பணம் கட்டி இரசீது வாங்கி வச்சிருந்தேன். ஆனால் 5 மாதமாகியும் அளந்து கொடுப்பதற்கு எந்த தகவலும் வராததால், கடந்த 03.10.2023 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு காளையார் கரிசல்குளம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு சென்று வி.ஏ.ஓ திரு.பாலமுருகன் அவர்களை பார்த்து என்னங்க சார் நீங்க சொன்ன மாதிரி மே மாசமே பணம் கட்டிடோம். நீங்க இன்னும் அளந்து கொடுக்க வரவே இல்ல சார், என்ன சார், எப்ப எங்க அக்கா நிலத்த அளந்து கொடுப்பீங்க என்று கேட்டேன். அதற்கு வி.ஏ.ஓ திரு.பாலமுருகன் இ-சேவை மையத்தில பணத்த

கட்டுனா மட்டும் போதாதுங்க, பணத்தை கட்டிட்டு என்ன பாக்கணுங்க என்று சொன்னார். அதற்கு நான், அவரிடம் என்ன சார் பாக்கணும் என்று கேட்டேன். அதற்கு அவர் உங்க நிலத்தின் நான்குமால் பார்த்து அளக்க சர்வேயரை கூட்டிட்டு வரவும், அளந்தபிறகு சர்வேயர் கொடுக்ககூடிய சான்றிதழை பெற்றுதரவும் ஏற்பாடு செய்வதற்கு பணம் ரூ.10,000/- செலவாகும், நீங்க அந்த பணத்தை ரெடிப்பண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுங்க, நான் எல்லா வேலையும் முடிச்சு கொடுத்திரேன் என்று சொன்னார். அதற்கு நான், அவரிடம் எங்க அக்கா ஏற்கனவே ரெம்ப கஷ்டபடுது, நீங்க பார்த்து பணம் இல்லாமல் செஞ்சு கொடுங்க என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மேற்படி வி.ஏ.ஓ திரு.பாலமுருகன் கடந்த 06.10.2023ஆம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நானும், என் அக்கா திருமதி.ஜானகியும், அவரது வீட்டில் இருந்தபோது வந்து, எங்களிடம் மேற்படி நிலத்தை சர்வேயரை கூட்டி வந்து இன்று (06.10.2023)அளந்து கொடுக்கபோவதாக கூறி, நிலத்திற்கு வர சொன்னார். ஆகையால் நானும், என் அக்காவும் மேற்படி நிலத்திற்கு உடனே சென்றோம். அங்கு திரு.வேலுச்சாமி உட்பட அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்களும், எம்.ரெட்டியபட்டி போலீஸ் ஒருவரும் இருந்தனர். பின்னர் வி.ஏ.ஓ திரு.பாலமுருகன், சர்வேயர் மூலம் போலீசார் முன்னிலையில் எங்களுடைய நிலத்தை நான்குமால் பார்த்து அளந்து கொடுத்துவிட்டு, எங்களிடமும், அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்களிடமும் இனி யாரும் எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று சொல்லி இனிமேல் கல்ல ஊண்டிக்கோங்க என்று எங்களிடம் சொல்லிவிட்டு, வி.ஏ.ஓ திரு.பாலமுருகன் என்னை மட்டும் தனியாக அழைத்து வி.ஏ.ஓ ஆபிஸிக்கு வாங்க என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். ஆகையால் அவர் சொன்னப்படி நான் மட்டும் அவர் பின்னாடியே காளையர் கரிசல்குளம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.30 மணியளவில் சென்று வி.ஏ.ஓ. திரு.பாலமுருகனை சந்தித்தேன். அப்போது அவர், என்னிடம் எங்க நான் கேட்ட ரூ.10,000/- பணம் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், சார் நான்தான் ஏற்கனவே உங்ககிட்ட அக்க ரெம்ப கஷ்டப்படுது, அவங்களால இவ்வளவு பணம் புறட்ட முடியாது, பணமில்லாம செஞ்சு கொடுக்க சொன்னேன்ல சார் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், என்ங்க இப்ப வந்து இப்படி சொல்றீங்க, சர்வேயரையெல்லாம் கூட்டிட்டு வந்து நான் சொன்னது மாதிரி அளந்து கொடுத்துட்டேன், சான்றிதல் மட்டும் சர்வேயர்கிட்ட இருந்து வாங்கி கொடுக்கணும் என்று சொல்லிவிட்டு, உங்க அக்கா கஷ்டபடுறாங்கனு நீங்க சொல்றதுநால அதுல ரூ.5,000/-த்தை குறைச்சிக்கிட்டு, ரூ.5,000/-த்தை ரெடிபன்னி கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் உங்க நிலத்த நான்குமால் பார்த்து அளந்து கொடுப்பதற்கு சர்வேயர் வழங்கக்கூடிய சான்றிதல் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்பாகவும், கறராகவும் சொல்லிவிட்டார். அவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் நான் அப்போது அவரிடம் வேறுவழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து எனது அக்கா

திருமதி.ஜானகியிடம் வி.ஏ.ஓ லஞ்சப்பணம் ரூ.5,000/- கேட்ட விசயத்த சொன்னேன். அதற்கு எங்க அக்கா என்னிடம் தம்பி நாம ஏற்கனவே இ-சேவை மையத்துல பணம் கட்டியாச்சி இனி எதுக்கு லஞ்சப்பணம் கொடுக்கனும். லஞ்சம் கொடுக்க வேண்டாம். லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று சொன்னார். ஆகையால் என்னுடைய பெரியம்மா மகளான உடன்பிறவா அக்கா திருமதி.ஜானகி பெயரில் உள்ள நிலத்தை சர்வேயரை கூட்டிவந்து அளந்து கொடுத்ததுக்கும், சர்வேயர் நிலத்த அளந்ததுக்கும் கொடுக்கக்கூடிய சான்றிதழ் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் என்னிடம் ரூ.5,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட காளையார் கரிசல்குளம் வி.ஏ.ஓ வும் திரு.பாலமுருகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (Sd) அ.பாலகிருஷ்ணன் 08.10.2023 Sir, Received the complaint on 08.10.2023 at 17.00hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.07/2023 u/s 7 of PC Act 1988 as Amended in 2018 on 08.10.2023 at 19.00 hrs and took up for Investigation. (Sd) R.Boominathan, 08.10.2023, Insp. of Police, V&AC, VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM / Spl. Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

Insp of Police
V&AC, VNR.